**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை**

**O.S. No. 70/2022**

வாதி தரப்பு சாட்சியாகிய PW4–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திர மோகன் | தாலுக்கா | : திருவாரூர் |
| த/பெ | : இடும்பையன் | கிராமம் | : திருவாரூர் டவுன் |
| ஜாதி | : | தொழில் | : மண்டல துணை வட்டாட்சியர் |
| சமயம் | : | வயது | : 55 /26 |

(கடந்த 15.06.2026 தேதிய நீதிமன்ற உத்தரவை அனுசரித்து சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)

**கூடுதல் முதல் விசாரணை**

தேவர்கண்டநல்லூர் கிராமம் புல எண் 57/1B2 க்கு சண்முகம் பெயரிலிருந்து கிருஷ்ணமூர்த்தி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டதற்கான வட்டாட்சியர் உத்தரவு உள்ளதா என்றால் இல்லை. அதற்கென வட்டாட்சியர் உத்தரவு எதுவும் இல்லை. நான் இந்நீதிமன்றத்திற்கு தற்போதைய அ பதிவேட்டை எடுத்து வந்துள்ளேன். அதன்படி புல எண் 57/1B2 க்கு தமிழ்க்கொடி பெயரில் பதிவு உள்ளது.**(அ பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பொதுவாக சாசனத்தின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்யப்படும்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வருவாய் துறையில் எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் 08.08.1996 ல் பணிக்கு சேர்ந்தேன். 1996க்கு முந்தைய வருவாய் பதிவேடுகள் குறித்த நடைமுறைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் புல எண் 57/1B2 க்கு பட்டா பெயர் மாற்ற உத்தரவு இல்லை என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் UDR மற்றும் ஆன்லைன் பதிவுகளின் அடிப்படையில் கூறினேன்.

பி.சா.ஆ. 3 குடவாசல் வட்டாட்சியர் மேலொப்பத்தை தொடர்ந்து ஏற்பட்ட உத்தரவு குறித்து தெரியுமா என்றால் தெரியாது. 1983 ல் குடவாசல் வட்டாட்சியரின் உத்தரவு குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.சா.ஆ. 3 மேலொப்பத்தை தொடர்ந்து ஏற்பட்ட விசாரணையின் அடிப்படையில் புல எண் 57/1B2 க்கு சண்முகம் பிள்ளை பெயரிலிருந்து கிருஷ்ணமூர்த்தி பெயருக்கு பட்டா மாற்றம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நாளது தேதியில் புல எண் 57/1B2 க்கு தமிழ்க்கொடி பெயரிலும் மற்றும் புல எண் 57/1B1 க்கு கிருஷ்ணமூர்த்தி பெயரிலும் அ பதிவேடு உள்ளது என்றால் சரிதான். பதிவு சாசனம் ஏற்படும் பொழுது பட்டா பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பம் சார் பதிவாளர் மூலமாக வருவாய் துறைக்கு அனுப்பப்படும் என்றால் சரிதான். தமிழ்கொடி பெயரில் ஏற்பட்ட செட்டில்மென்ட் சாசனத்தை அனுசரித்து தான் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய சாட்சி விசாரணையின் போது **வா.சா.ஆ. 18** ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.06.23 18:41:17 +0530